**மே – 27**

# TNPSC துளிகள்

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது, ரூபாய் மதிப்பினை நன்கு நிலைப்படுத்துவதற்காக தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு 2024-25 ஆம் நிதியாண்டில் சுமார் 398.71 பில்லியன் டாலர் மதிப்பிலான அந்நியச் செலாவணியை விற்பனை செய்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) மத்திய வாரியமானது, 2024-25 ஆம் நிதியாண்டிற்கான உபரியாக 2.69 லட்சம் கோடி ரூபாயை அரசாங்கத்திற்குப் பரிமாற்றுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 'சிவகாசி பட்டாசுக்கு' புவிசார் குறியீடு




- சிவகாசியில் உள்ள நூற்றாண்டு காலம் பழமையான பட்டாசுத் தொழில் தற்போது புவிசார் குறியீடு பெறுவதற்கு வேண்டி விண்ணப்பித்துள்ளது.
- சிவகாசி, வெம்பக்கோட்டை, விருதுநகர், சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் கோவில் பட்டி பிராந்தியத்தின் சில பகுதிகளில் உள்ள கிராமங்களில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் சிறிய குடிசைகளில் பட்டாசுகள் தயாரிக்கப்படுகின்றன.
- இந்தியாவில் 80 சதவீதத்திற்கும் மேற்பட்டப் பட்டாசுகள் இந்தப் பகுதியில் தயாரிக்கப் படுகின்றன.
- சுமார் 6,000 கோடி ரூபாய் மதிப்பிலான அதன் சந்தை அளவானது ஆண்டுதோறும் 10% அதிகரித்து வருகிறது.
- வறண்ட பகுதியான சிவகாசி, பட்டாசு உற்பத்திக்கு ஏற்ற காலநிலையைக் கொண்டு உள்ளது.
- அதன் அதிக தொழில்துறை சார்ந்த செயல்பாடுகள் மற்றும் செழிப்பான தொழில்கள், குறிப்பாக அச்சிடுதல், பட்டாசு மற்றும் தீப்பெட்டிகள் போன்றவற்றின் காரணமாக


இது "மினி ஜப்பான்" அல்லது "குட்டி ஜப்பான்" என்று அழைக்கப் படுகிறது.

- இந்தப் புனைப் பெயரை இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு வழங்கினார்.

# தேசியச் செய்திகள்

## அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டது என்ற கோட்பாடு

- குடியுரிமை (திருத்தம்) சட்டத்தினை அரசியலமைப்புக்குட்பட்ட சட்டமாக அறிவிக்கக் கோரிய மனுவை அவசரமாக விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.
- இந்தியாவின் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்திற்கு ஏற்கனவே "அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டது" என்ற ஒரு கருத்து இருப்பதாகவும் அது கூறியது.
- 'அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டது' (Presumption Of Constitutionality) என்ற ஒரு சொல்லானது, சட்டப்பூர்வ விளக்கத்தின் போது நீதிமன்றங்களால் பயன்படுத்தப்படும் ஒரு சட்டப்பூர்வக் கொள்கையாகும்.
- சமூகத் தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையிலான சட்டங்களை உருவாக்குவதற்கு சட்டமன்ற அமைப்புகள் சிறந்த முறையில் தயாராக உள்ளன என்ற நம்பிக்கையில் இந்தக் கோட்பாடு அமைந்துள்ளது.
- அரசியலமைப்பு மீறலுக்கான தெளிவான சான்றுகள் இல்லாவிட்டால் நீதிமன்றங்கள் சட்டங்களை நிலைநிறுத்தும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.
- 'NDMC மற்றும் பஞ்சாப் மாநிலம்' (1996) இடையிலான வழக்கில் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்தக் கோட்பாட்டின் வரம்புகளை முன் வைத்தது.




## புதுப்பிக்கப்பட்ட பல் முகமை மையம் (MAC)


- புது டெல்லியில், புலனாய்வு வாரியத்தின் (IB) கீழ் ஒரு பொதுவான தீவிரவாத எதிர்ப்புக் கட்டமைப்பான புதுப்பிக்கப்பட்ட பல்நோக்கு முகமை (MAC) திறக்கப்பட்டது.
- இது கார்கில் போருக்குப் பிறகு, 2001 ஆம் ஆண்டில் கருத்தாக்கம் செய்யப்பட்டது.
- புதிய MAC வலையமைப்பு ஆனது, நாட்டின் அனைத்து காவல் மாவட்டங்களையும் ஒரு பாதுகாப்பான வலையமைப்பு மூலம் ஒருங்கிணைக்கிறது.

- ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு (RAW) ஆனது, ஆயுதப்படைகள் மற்றும் மாநிலக் காவல்துறை உட்பட 28 அமைப்புகள் இந்தத் தளத்தின் ஒரு பகுதியாக உள்ளன.

**Multi Agency Centre (MAC)**

- It is a counter-terrorism grid under the Intelligence Bureau (IB).
- It was originally conceptualised in 2001 after the Kargil war to improve national security coordination.
- The new MAC securely connects all police districts across India.
- A total of 28 organisations, including RAW, armed forces, and State police, are integrated into the platform.
- MAC facilitates real-time sharing of intelligence inputs among various security agencies.
- The platform is aimed at countering terrorism and its links with organised crime.

## 2025 ஆம் ஆண்டில் போதுமான மின்சாரம் அளவு




- கடந்த நான்கு ஆண்டுகளில், எரிசக்தித் தேவைக்கும் அதன் உற்பத்தித் திறனுக்கும் இடையிலான இடைவெளி 0.1% ஆகக் குறைந்துள்ளது மற்றும் மொத்த நிறுவப்பட்டத் திறன் 470 GW ஆக அதிகரித்துள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் 13,74,024 மில்லியன் அலகாக இருந்த இந்தியாவின் உற்பத்தி என்பது, 2024-25 ஆம் ஆண்டில் 15,46,229 மில்லியன் அலகாக அதிகரித்துள்ளதால், 2021-22 ஆம் ஆண்டில் 0.4% ஆக இருந்த இடைவெளி 2024-25 ஆம் ஆண்டில் சுமார் 0.1% ஆகக் குறைந்துள்ளது.
- தற்போது, அனல் மின் உற்பத்தி (நிலக்கரி, டீசல், லிக்னைட் மற்றும் இயற்கை எரிவாயு) மூலம் உற்பத்தி செய்யப்படும் ஆற்றல் ஆனது 12,41,261 மில்லியன் அலகுகள் (MU) ஆகும்.
- அணு மற்றும் புனல் மின் மூலங்கள் முறையே 51,962 மில்லியன் அலகுகள் மற்றும் 1,39,780 மில்லியன் அலகுகள் ஆகும்.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து 2,30,868 மில்லியன் அலகுகள் ஆற்றல்

உற்பத்தி செய்யப்பட்டது.

- இவற்றில் காற்றாலை 78,214 மில்லியன் அலகுகள், சூரிய சக்தி 1,27,339 மில்லியன் அலகுகள், உயிரி எரிபொருள் 3392 மில்லியன் அலகுகள், கரும்பு ஆலைக் கழிவு மூலம் 8349 மில்லியன் அலகுகள், சிறிய புனல் மின்சாரம் 10,951 மில்லியன் அலகுகள் மற்றும் பிற 2621 மில்லியன் அலகுகள் பங்கினைக் கொண்டுள்ளன.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்களிப்பின் சதவீதமானது 2021-22 ஆம் ஆண்டில் 11.5 சதவீதத்திலிருந்து 2024-2025 ஆம் ஆண்டில் 13.78% ஆக படிப்படியாக அதிகரித்துள்ளது.
- தேசிய மின் கட்டமைப்பு ஆனது, நாட்டில் மாநிலங்களுக்கு இடையேயான மின்சார விநியோகத்தினை கண்காணிக்கவும், ஒழுங்குமுறைப் படுத்தவும், எளிதாக்கவும் என அரசாங்கத்தால் நடத்தப் படும் இந்திய மின் கட்டமைப்பு விநியோக கழக லிமிடெட் மூலம் பராமரிக்கப்படுகிறது.
- தெற்கு மற்றும் மேற்கு ஆகிய இரண்டு பிராந்தியங்கள் ஆனது, இந்தியாவின் மிகவும் பெரிய மின் நுகர்வு மாநிலங்களான மகாராஷ்டிரா, குஜராத், தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகியவற்றை உள்ளடக்கியது.
- அவை பல ஆண்டுகளாக தனது ஆற்றல் தேவை மற்றும் உற்பத்தி இடைவெளியை 0.1% ஆக கட்டுக்குள் வைத்துள்ளன.
- மேற்கு மாநிலங்களில், அதன் மின் தேவை 2021-22 ஆம் ஆண்டில் சுமார் 1,72,823 மில்லியன் அலகிலிருந்து 2023-2024 ஆம் ஆண்டில் சுமார் 2,07,018 மில்லியன் அலகாக அதிகரித்துள்ளதுடன் மகாராஷ்டிரா மிகப்பெரிய மின் நுகர்வு கொண்ட மாநிலமாக உள்ளது.
- இருப்பினும், அதன் மின்ஆற்றல் தேவை மற்றும் உற்பத்தி இடைவெளியை வெறும் 0.1% ஆக மட்டுமே வைத்து, அதன் மின் ஆற்றல் தேவையை பூர்த்தி செய்ய முயன்றுள்ளது.
- இப்பிராந்தியத்தின் இரண்டாவது பெரிய மின் நுகர்வு மாநிலமான குஜராத்தில் அதன் மின்சாரத் தேவை சுமார் 1,29,953 மில்லியன் அலகிலிருந்து 1,45,768 மில்லியன் அலகாக அதிகரித்திருந்தாலும், அதன் ஆற்றல் தேவை மற்றும் உற்பத்தி இடைவெளி 0% ஆகவே உள்ளது.
- தமிழ்நாட்டின் மின்சாரத் தேவை என்பது அதிகபட்சமாக சுமார் 1,09,816 மில்லியன் அலகிலிருந்து 1,26,163 மில்லியன் அலகாக உள்ளதுடன் அதன் ஆற்றல் தேவை மற்றும் உற்பத்தி இடைவெளியும் 0% ஆக உள்ளது.
- இதேபோல், தெலுங்கானா மற்றும் கர்நாடகா ஆகியவை 0% ஆற்றல் தேவை மற்றும் உற்பத்தி இடைவெளியை பேணி வருகின்றன.
- ஆனால், கிழக்கு மின் கட்டமைப்பின் பீகார் மற்றும் ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்கள் தங்கள் மின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாமல் உள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியா – 2050 ஆம் ஆண்டில் முன்னணி உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் நாடு

- 2050 ஆம் ஆண்டிற்குள் சீனாவை முந்தி இந்தியா உலகின் முன்னணி உருளைக்கிழங்கு உற்பத்தியாளராக மாறும் பாதையில் உள்ளது.
- இந்தியாவின் வருடாந்திர உருளைக் கிழங்கு உற்பத்தி அளவானது தற்போதைய 60 மில்லியன் டன்களிலிருந்து 2050 ஆம் ஆண்டிற்குள் சுமார் 100 மில்லியன் டன்களாக உயரக் கூடும்.
- உருளைக்கிழங்கானது 17 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசிய நாட்டு வணிகர்களால் இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

- அரிசி, கோதுமை மற்றும் மக்காச்சோளத்திற்குப் பிறகு இந்தியாவின் நான்காவது மிக முக்கியமான உணவுப் பயிராக உருளைக்கிழங்கு உள்ளது.
- 23 மாநிலங்களில் பயிரிடப் படுகின்ற இதன் உற்பத்தியில் 85% பங்கு வட இந்தியாவில் உள்ள இந்தியக் கங்கைச் சமவெளிகளில் இருந்தே வருகின்றன.
- உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் பீகார் ஆகியவை உருளைக்கிழங்கு உற்பத்தியில் முன்னணியில் உள்ள 3 மாநிலங்கள் ஆகும்.




India Set to Become World's Top Potato Producer by 2050

**Key Highlights in the News:**

- India is poised to surpass China as the world's leading potato producer by 2050, according to scientists from the Peru-based International Potato Center (CIP).

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியா-ஜப்பான் ஆகிய நாடுகளின் LUPEX திட்டம்





- LUPEX (நிலவின் துருவ ஆய்வு) என்றும் அழைக்கப்படுகின்ற சந்திரயான்-5 ஆனது ISRO மற்றும் JAXA இடையேயான ஒரு கூட்டுத் திட்டமாகும்.
- சுமார் 6.5 டன் எடை கொண்ட இக்கலம் 2027-28 ஆம் ஆண்டில் H3 எனப்படும் ஜப்பானிய

ஏவுகலத்தின் மூலம் ஏவப்பட திட்டமிடப் பட்டுள்ளது.

- இது முதன்மையாக தண்ணீர் உள்ளதா என கண்டறிவதற்காக நிலவின் மேற்பரப்பை ஆழ்ந்து ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது.
- தரையிறங்குக் கலம் மற்றும் உலாவிக் கலத்தின் பிரதான வடிவமைப்புக் கட்டத்தை இக்குழு விரைவில் தொடங்க உள்ளது.
- இஸ்ரோ நிறுவனமானது சந்திரயான்-5 கலத்தின் தரையிறங்குக் கலத்தினையும், அதே நேரத்தில் JAXA நிறுவனமானது 350 கிலோ எடையுள்ள உலாவிக் கலத்தினையும் உருவாக்கவுள்ளன.

## புவியின் ஆழ்கடல் தளம் பற்றிய ஆய்வு




- புவியின் மேற்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு பரப்பானது கடல் மட்டத்தின் சுமார் 200 மீ அல்லது அதை விட ஆழமானப் பெருங்கடலாக உள்ளது.
- இதனால் இது உலகின் மிகப்பெரிய மற்றும் குறைவாகவே ஆராயப்பட்ட சூழலியல் அமைப்பாகும்.
- இன்று வரையில் ஆராய்ச்சியாளர்கள் 120 பிரத்தியேகப் பொருளாதார மண்டலங்கள் மற்றும் ஆழ்கடல்களில் செயல்பாடுகளை மேற்கொள்ளும் 14 நாடுகளில் உள்ள சுமார் 34 நிறுவனங்களிலிருந்து 43,681 ஆழ்கடல் காட்சிப் பதிவுகளைச் சேகரித்துள்ளனர்.
- இதனால், ஆழமான கடலின் அடிப் பகுதியில் மிகவும் அதிகபட்சமாக 0.001% காட்சிப் பதிவுகளை மட்டுமே பதிவு செய்து உள்ளடக்கியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்தனர்.
- அனைத்து ஆழ்கடல் மூழ்கு ஆய்வுகளிலும் சுமார் 97 சதவீதத்திற்கும் அதிகமானவை அமெரிக்கா, ஜப்பான், நியூசிலாந்து, பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகிய ஐந்து நாடுகள்

மூலமாக மட்டுமே நடத்தப்பட்டுள்ளன.

- சுமார் 12,080 அடி (3,682 மீட்டர்) என்ற கடலின் சராசரி ஆழமானது, அதனை புலப்படும் காட்சி வழியாக அணுக முடியாததாக ஆக்குகிறது.
- பெருங்கடலின் 700,000 முதல் சுமார் 1 மில்லியன் இனங்கள் (நுண்ணுயிரிகளைத் தவிர) அதாவது மூன்றில் இரண்டு பங்கு இனங்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை அல்லது விளக்கப்படவில்லை.
- ஆழ்கடல் ஆனது சராசரியாக 4°C வெப்பநிலையுடன் கடுமையான குளிர் நிலையைக் கொண்டுள்ளது.
- இது புவியின் வளிமண்டலத்தின் அழுத்தத்தை விட சுமார் 40 முதல் 110 மடங்கு வரை அதிக அழுத்தத்திற்கும் உட்பட்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இரண்டு கலப்பு பசுந்தாள் உரத் தொகுப்புகள்




- கலப்பு பசுந்தாள் உரப் பயிர் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக என்று தேசிய விதைகள் கழகம் (NSC) ஆனது, இரண்டு கலப்பு பசுந்தாள் உரத் தொகுப்புகளை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இந்த நடைமுறையில் பல்வேறு பசுந்தாள் உரப் பயிர் இனங்களை ஊட்ட நிரப்புப் பண்புகளுடன் ஒரு சேர வளர்ப்பது மற்றும் மண்ணை வளப்படுத்துவதற்காக மீண்டும் அதனை மண்ணில் சேர்ப்பது போன்றவை அடங்கும்.
- சில இனங்கள் களை முளைப்பதைத் தடுக்கும் வகையில் இயற்கைச் சேர்மங்களை வெளியிடுகின்றன, மற்றவை களை வளர்ச்சியை நேரடியாக ஒடுக்கும் அளவுக்கு மிக அடர்த்தியாக வளரும்.
- பசுந்தாள் உரம் என்பது அறுவடை செய்வதற்குப் பதிலாக அவற்றை மண்ணில்

மீண்டும் சேர்க்கப்படுவதற்காக என்று பிரத்தியேகமாக வளர்க்கப்படும் பயிர்களைக் குறிக்கிறது.

- இந்தப் பயிர்கள் ஆனது, வயலிலிலேயே சிதைந்து, கரிமப் பொருட்கள் மற்றும் மிகவும் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களால் மண்ணை வளப்படுத்துகின்றன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## Child Wellbeing in an Unpredictable World – யுனிசெஃப்

| Overall rank | Country | Mental health | Physical health | Skills |
|---|---|---|---|---|
| 1 | Netherlands | 1 | 4 | 11 |
| 2 | Denmark | 3 | 3 | 8 |
| 3 | France | 11 | 2 | 9 |
| 4 | Portugal | 2 | 10 | 22 |
| 5 | Ireland | 24 | 11 | 1 |
| 6 | Switzerland | 13 | 7 | 6 |
| 7 | Spain | 4 | 25 | 16 |
| 8 | Croatia | 9 | 31 | 3 |
| 9 | Italy | 8 | 16 | 23 |
| 10 | Sweden | 14 | 13 | 14 |
| 11 | Hungary | 6 | 30 | 13 |
| 12 | Austria | 16 | 20 | 7 |

- "Report Card 19: Child Wellbeing in an Unpredictable World" என்ற தலைப்பிலான இந்த ஒரு அறிக்கையானது 2018 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் தரவுகளை ஒப்பிட்டுள்ளது.
- கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் உலகளாவியப் பொது முடக்கம் ஆகியவை, 43 OECD மற்றும் EU நாடுகளில் குழந்தைகளை எவ்வாறு பாதித்தன என்பது குறித்த முக்கியக் கண்ணோட்டத்தினை இது வழங்குகிறது.
- முதல் மூன்று இடங்களில் உள்ள நெதர்லாந்து, டென்மார்க் மற்றும் பிரான்சு ஆகியவை மனநலம், உடல் ஆரோக்கியம் மற்றும் திறன்களிலும் முன்னணியில் உள்ளன.
- 43 நாடுகளில், 15 வயதுடைய சுமார் 8 மில்லியன் குழந்தைகள் செயல்பாட்டு ரீதியாக கல்வியறிவு மற்றும் எண்ணியல் கல்வியறிவு கொண்டிருக்கவில்லை என்று மதிப்பிடப் பட்டுள்ளது.
- பல்கேரியா, குரோஷியா, ஹங்கேரி, ருமேனியா மற்றும் ஸ்லோவாக்கியா ஆகியவை மனநலத்தில் முன்னணி இடத்தைப் பிடித்திருந்தாலும், உடல் ஆரோக்கியத்தில் மிகக் குறைந்த அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளன.
- ஜப்பான், தென் கொரியக் குடியரசு மற்றும் ஸ்லோவேனியா ஆகியவை திறன்களில் மூன்றாவது முன்னணி இடத்தில் இருந்தாலும், மனநலத்தில் அவை கடைசியிலிருந்து மூன்றாவது இடத்தில் உள்ளன.
- செக் குடியரசு மற்றும் ஐஸ்லாந்து உடல் ஆரோக்கியத்தில் முன்னணி இடத்திலும், மன ஆரோக்கியம் மற்றும் திறன்கள் ஆகிய இரண்டிலும் அவை கடைநிலை இடங்களிலும் உள்ளன.
- 32 நாடுகளுள், 14 நாடுகளில் குழந்தைகளின் வாழ்க்கை பூர்த்தி/திருப்தி நிலை மிகவும்

கணிசமாகக் குறைந்து வருகிறது.

- கிடைக்கப் பெற்றத் தரவுகளுடன், 43 நாடுகளுள் 14 நாடுகளில் அதிக உடல் எடை கொண்டவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது என்பதோடு இது மிக நீண்ட காலப் போக்காகத் தொடர்கிறது.
- 2018 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இளம் பருவத்தினரிடையே தற்கொலை விகிதம் 18 நாடுகளில் குறைந்திருந்தாலும், 17 நாடுகளில் அது அதிகரித்து உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## முழு கல்வியறிவு பெற்ற முதல் மாநிலம் – மிசோரம்



As per the 2011 Census,Mizoram had a literacy rate of 91.33%, ranking third in the country.

**States and UTs' literacy rates**

| | |
|---|---|
| Mizoram | 98.2% |
| Lakshadweep | 97.3% |
| Nagaland | 95.7% |
| Kerala | 95.3% |
| Meghalaya | 94.2% |
| Tripura | 93.7% |
| Chandigarh | 93.7% |
| Goa | 93.6% |
| Puducherry | 92.7% |
| Manipur | 92% |

SOURCE: MOSPI PLFS 2023-24, (MEN AND WOMEN, 7 YEARS AND ABOVE)

- ULLAS (சமூகத்தில் அனைவருக்குமான வாழ்நாள் முழுவதுமான கற்றல் குறித்து புரிந்து கொள்தல்) முன்னெடுப்பின் கீழ் முழுமையாக 'கல்வியறிவு பெற்றதாக' அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்ட முதல் மாநிலமாக மிசோரம் மாறியுள்ளது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, சுமார் 91.33% கல்வியறிவு விகிதத்துடன் இம்மாநிலம் இந்தியாவில் 3வது இடத்தில் உள்ளது.
- வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பின் (PLFS 2023–2024) படி, மிசோரம் 98.2% கல்வியறிவு விகிதத்தை அடைந்திருந்தது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★